## கொழும்பு பெரும்பாக கழிவுநீர் முகாமைத்துவச் செயற்திட்டம் - 2017

கொழும்பு பெரும்பாக கழிவுநீர் முகாமைத்துவச் செயற்திட்டத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்குமிடையில் கைச்சாத்திடப்பட்ட 2009 திசெம்பர் 18 ஆந் திகதிய 2557 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் பட்டோலை 5 இன் 27 ஆம் பிரிவு மற்றும் 2558 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் பட்டோலை 5 இன் 27 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், முன்னைய உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சாகவிருந்த தற்போதைய மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் கொழும்பு மாநகர சபை மற்றும் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை என்பன அமுலாக்கல் முகவர்களாக உள்ளன. முன்னேற்றப்பட்ட கடற்கரையோர மற்றும் நாடாளவிய நீர் தரத்தின் விளைவாக துாய்மை மற்றும் சுகாதார நிலைமையை முன்னேற்றுவதனுாடாக கொழும்பு பெரும்பாகத்திலுள்ள நகர மற்றும் புறநகர் குடியிருப்பாளர்களிற்கான நகர அபிவிருத்தி மற்றும் பொதுச் சுகாதாரத்தை முன்னேற்றுவது செயற்திட்டத்தின் நோக்கமாக உள்ளது. கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 12,597.11 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 110.24 மில்லியன் ஆக உள்ளதுடன் அதில் ரூபா 10,783.65 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 94.37 மில்லியனை நிதியளிப்புச் செய்வதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி இணங்கியிருந்தது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2010 ஏப்ரல் 09 ஆந் திகதி ஆரம்பித்திருந்ததுடன் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் முடிவுறுத்துவதற்கு பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் காலபப்குதியானது 2019 மார்ச் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்தது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின்

நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்டத்தின் முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், போன்றவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்டத்தின் செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன்கள் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்,

(உ) கடன்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஊ) கடன்களின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(எ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களினை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) எனது முன்னைய கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரிசெய்வதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஓ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும், ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

---------------------------

### 2.1. அபிப்பிராயம்

----------------------

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்கு கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன என்பதுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்,

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு அமைவாக மீளளிப்புக்கான விண்ணப்பங்களிற்கு ஆதாரமாக அமைந்திருந்தன என நம்பகரமாக திருப்திப்பட முடிந்திருந்தது என்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரிசெய்வதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஊ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-------------------------------------------------------------------

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

----------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சொத்தின் சுபாவம் மாற்றமடையக்கூடிய மற்றும் பிரயோசனம் தரக்கூடிய ஆயுட்காலம் சம்பந்தமாக கருத்திற்கொள்ளாமல் செயற்திட்டத்தின் சிவில் நிர்மாணப்பணியில் ஈடுபடுகின்ற ஒப்பந்தகாரர்களின் மார்க்கமாக கொள்முதல் செய்த மொத்தமாக ரூபா 26.32 மில்லியன் பெறுமதியான 04 வாகனங்கள் செயற்திட்டத்தின் சிவில் வேலையின் கீழ் காண்பிக்கப்பட்டது.

(ஆ) வகைப்படுத்தலின் குறைபாடு காரணமாக கட்டிட நவீனமயப்படுத்தலுக்கான மொத்தம் ரூபா 6.33 மில்லியன் செலவு தவறுதலாக இயந்திர உபகரங்களின் கீழ் காட்டப்பட்டது.

**2.2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

மீளாய்வாண்டிற்கான சொத்து, இயந்திர தொகுதி மற்றும் உபகரணங்களின் பொருட்கள் மெய்மையாய்வு அறிக்கை 2018 மே 08 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அதன் பெறுபேறாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த மொத்தத் தொகையான ரூபா 615.68 மில்லியன் அந்த சொத்தின் பெறுமதி அதற்காக முன்வைத்த பரிந்துரைகளின் படி சீர்செய்யப்பட்டிருக்கவில்லை.

**3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்**

**3.1 நிதிகளின் பயன்பாடு**

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2017 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கைகளில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | 2016 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2016 ஆம் ஆண்டின் போது | | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஏடீபீ | 94.37 | 10,783.65 | 2,905.00 | 9.51 | 1,455.00 | 51.51 | 7,081.75 |
| ஜீஓஎஸ்எல் | 15.87 | 1,813.46 | 475.00 | 2.18 | 334.00 | 8.12 | 1,139.10 |
| | 110.24 | 12,597.11 | 3,380.00 | 11.69 | 1,789.00 | 59.63 | 8,220.85 |

மேற்குறிப்பிடப்பட்ட தகவலின் படி செயற்திட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு 7 ½ வருடங்கள் கடந்திருந்தும் ரூபா 12,597.11 மில்லியனுக்கு சமமான 110.24 மில்லியன் ஐ.அ.டொலர் முழுமையாக ஒதுக்கப்பட்டதிலிருந்து 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் ரூபா 8,220.85 மில்லியனுக்கு சமமான 59.63 மில்லியன் ஐ.அ.டொலர் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருப்பதாக தெரியவந்தது. எவ்வாறாயினும், செயற்திட்ட நடவடிக்கைகளை ஆரம்பத்திலிருந்து விரிவான அமுல்படுத்தும் திட்டமொன்று இல்லாததன் காரணமாக மிகுதியாக உள்ள 15 மாத காலப்பகுதிக்குள் செயற்திட்ட நடவடிக்கைகளுக்காக முழுமையான நிதி ஒதுக்கீட்டையும் உபயோகப்படுத்தும் ஆற்றல் குறைவடைந்துள்ளது. செயற்திட்ட பணிப்பாளரின் விளக்கவுரையின் படி, துறைமுக நகர செயற்திட்டம், கொழும்பு மத்திய வியாபார மாவட்டம் மற்றும் நீர் அபிவிருத்தி நடவடிக்கை போன்ற விசாலமான செயற்திட்டங்கள் அமுல்படுத்துவதன் காரணமாக கொழுப்பு நகர அபிவிருத்தி திட்டம் பின்னர் மாற்றமடைந்திருந்ததுடன் அதன் பெறுபேறாக கழிவு நீர் முகாமை செயற்திட்டம் தாமதமடைந்ததுடன் நிறைவு செய்வதற்கும் சிரமமாகவுள்ளதாகவும் தெரிவித்தார்.

## 3.2 பௌதீக செயன்முன்னேற்றம்

---

பெரும்பாக கொழும்பு பகுதியில் உள்ளக நீரின் தரத்தை மேம்படுத்தும் நோக்குடன் மற்றும் கழிவு நீர் குழாய் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல் நிறுவன மற்றும் செயற்பாட்டு கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல் மற்றும் செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் அமுல்படுத்தலுக்கு உதவுதல் என்ற 03 கூறுகளின் கீழ் செயற்திட்டத்தினுடைய நடவடிக்கைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன. 2016 திசெம்பர் 31 ஆந் திகதியாகும் போது கழிவுநீர் குழாய் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திலின் கூறின் கீழ் கழிவுநீர் குழாய்களை சுத்தப்படுத்தும் உபகரணம் மற்றும் செயற்பாட்டு மற்றும் பராமரிப்பு உபகரங்களை விநியோகிக்கும் நடவடிக்கைகள் முடிவடைந்திருந்ததுடன் ஒப்பந்தகாரருக்கு போதுமான அளவு மனித மற்றும் பௌதீக வளங்களை உபயோகிப்பதற்கு முடியாமையின் காரணமாக சாக்கடை இணைப்புக்களின் 10 கிலோமீற்றர் புனரமைப்பு மற்றும் சாக்கடை இணைப்புக்களின் 125 கிலோமீற்றர்களின் குழாய்களின் தரத்தினை மதிப்பீடு செய்தலின் கீழ் நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. மேலும், ஒப்பந்தம் வழங்களிலுள்ள தாமதம் மற்றும் ஒப்பந்தகாரரின் நிர்மாண உட்கட்டமைப்பு போதியளவு காணப்படாமையின் காரணமாக 2017 திசெம்பர் 31 ஆந் திகதி புனர்நிர்மாண நடவடிக்கைக்காக பம்பு நிலைய திட்டமிட்டு எதிர்பார்த்த இலக்குக்கு பின்னடைவு காணப்பட்டது.

## 3.3 ஒப்பந்த நிர்வாகம்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒப்பந்தகாரரினால் பின்பற்றப்பட்ட பாதுகாப்பான நடைமுறைகளின்மை காரணமாக தனியார் வீட்டு உரிமையாளர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட சேதங்கள் காரணமாக வனாத்தமுள்ள சாக்கடை உட்கட்டமைப்பை மேம்படுத்தல் திட்டத்தின் கீழ் பின்னர் கைவிடப்பட்டது. மேலும் ஒப்பந்தகாரர்களினால் சலுகைகள் பெறாத நகரத்தில் காணப்படுகின்ற சமூகங்களுக்கு ஏற்படுத்தப்பட்ட நட்டத்தினை ஈடுசெய்வதற்கான விரிவான அடிப்படையில் காப்புறுதி பாதுகாப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. ஒப்பந்தத்தின் கீழ் வேலை நிறுத்தப்பட்டதன் காரணமாக ஒப்பந்தகாரரினால் சீவிலீ மாவத்தை மற்றும் சரணபாலஹிமி மாவத்தையில் சேதமுற்ற வீடுகளுக்கான புனர்நிர்மாணப் பணிகள் நடைபெற்றிருக்கவில்லை. 2017 ஏப்ரல் 15 ஆந் திகதி வேலை நிறுத்தப்பட்ட சந்தர்ப்பத்திலே ஆரம்ப அளவீட்டு பட்டியலில் குறிப்பிடப்பட்டிருந்த வீத அடிப்படையில் ரூபா 34.19 மில்லியன் பெறுமதியான வேலைகள் முடிவடையாமல் காணப்பட்டது. கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம் பின்னர் புதிய வீத அடிப்படையில் அந்த வேலைக்காக ரூபா 65.67 மில்லியன் செலவிலான பொறியியல் மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம் குறிப்பிடப்பட்ட பிரதேசத்திற்குள் அண்மையில் நிறைவேற்றப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் காரணமாக 10 கிலோமீற்றர்கள் சாக்கடை குழாய்களின் புனர்நிர்மாணம் மற்றும் 125 கிலோமீற்றர் சாக்கடை இணைப்புக்களின் நிலைமையை மதிப்பீடு செய்தல் ஒப்பந்தத்தின் கீழ் வழங்கப்பட்ட ஒப்பந்தத்தின் பகுதியான கொழும்பு சாக்கடை கட்டமைப்பின் வடக்கு பிரதேசத்திற்கு நீர் பெறப்படும் மற்றும் கிருலப்பனை மற்றும் நாரஹேன்பிட்டிய பிரதேசங்களின் சாக்கடை குழாய் பரப்புதல் நீக்கப்பட்டிருந்தது. அதனால் வேலைகளின் விடயப்பரப்பு குறைதல் சம்பந்தமான ஒப்பந்த உடன்பாடுகளில் மாற்றங்கள் செய்வதற்கு செயற்திட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 மீள் குடியமர்த்துதல் நடவடிக்கை

----------------------------------------------------------

கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம் நகர்ப்புற அபிவிருத்தி அதிகாரசபையினால் மீள் குடியமர்த்துதல் திட்டம் நடைமுறைப்படுத்தலின் தாமதம் காரணமாக செயற்திட்டத்தின் மூலம் 2013 ஆம் ஆண்டில் விடயங்கள் ஆரம்பிக்கப்பட்டு தெமட்டகொடை பிரதேசத்தில் அரச காணிகளில் அத்துமீறி குடியிருந்த 10 குடும்பங்கள் உட்பட 67 குடும்பங்களை மீள குடியமர்த்துவது 2017 திசெம்பர் 31 ஆந் திகதியிலும் முடிவடைந்திருக்கவில்லை. மேலும் செயற்திட்டத்தில் அத்துமீறி குடியேறியுள்ள குடும்பங்களை வேறு இடங்களுக்கு மீண்டும் குடியமர்த்துவதற்காக ரூபா 40.30 மில்லியன் மேலதிக செலவொன்று மதிப்பிடப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக தெமட்டகொடை மல்லிகாராம மாவத்தையில் அத்துமீறி குடியேறியவர்களை மீண்டும் குடியமர்த்துவதற்காக மொத்தம் ரூபா 4 மில்லியன் செலவு செய்வதற்கு செயற்திட்டத்திற்கு நேர்ந்துள்ளது.